**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>**

**முன்னிலை:– திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 25ம் நாள்

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ம் நாள் புதன் கிழமை

**<u>அசல் வழக்கு எண்.28/2024</u>**

(CNR No.TNTV14-000151-2024)

துரைமுருகன் ........ வாதி

– எதிராக –

1. எம்.ராஜேந்திரன்
2. ஆர்.கஸ்தூரி ........ பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 01.04.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பி.எஸ்.மணிகண்ணன், எம்.காம்., பி.எல்., திரு.எஸ்.முஹம்மது பைஜுதீன், பி.காம்., எல்.எல்.பி., மற்றும் திரு.கே.புரட்சிதூயன், பி.இ., எல்.எல்.பி., ஆகியோர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.பாலன், பி.ஏ., பி.எல்., மற்றும் திரு.எம்.மகேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், இருதரப்பு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த பின்னர், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

அசல் வழக்கானது வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து தாவா தொகை கிடைக்கவும், அதற்குரிய பின்வட்டி மற்றும் வழக்கு செலவுத்

தொகையுடன் வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்தி வைக்க கோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி வழக்குரையின் சுருக்கம் :–</u>

பிரதிவாதிகள் இருவரும் கணவன் – மனைவி ஆவார்கள் என்றும், மேலும் பிரதிவாதிகள், வாதியின் குடும்ப நண்பர்கள் என்றும், பிரதிவாதிகளின் குடும்ப செலவினங்களுக்காகவும், வியாபார அபிவிருத்திக்காகவும் வாதியிடம், பிரதிவாதிகள் கடந்த 10.12.2022 அன்று ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம்) கடனாக ரொக்கமாக பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/–க்கு ரூ.1/– வீதம் வட்டி சேர்த்து செலுத்துவதாக ஒப்புக் கொண்டு ஒரு கடனுறுதி பத்திரம் வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி அசல் மற்றும் வட்டித் தொகையை பிரதிவாதிகள், வாதி வேண்டும்போது கொடுப்பதாகவும், மேலும், வாதி பிரதிவாதிகளிடம் கடன்தொகையையும் அதற்குரிய வட்டியையும் சேர்த்து திரும்பத்தருமாறு பலதடவை நேரிலும், உறவினர்கள் மூலமும் கேட்டும் பிரதிவாதிகள் இதோ, அதோ என்று வீண் சால்சாப்புகளை சொல்லி கடன் தொகையையும், வட்டியையும் கொடுக்காமல் காலம் கடத்தி வந்தார்கள் என்றும், அதனால் வாதியிடம் பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகை ரூ.3,00,000/= (ரூபாய் மூன்று லட்சம்) மற்றும் அதற்குரிய வட்டித்தொகையையும் 15 தினங்களுக்குள் செலுத்தி வைக்கக் கோரி வாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 03.02.2024 ஆம் தேதி பதிவு அஞ்சலில் ஓர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பினார்.

ii) மேற்படி அறிவிப்பினை 10.02.2024ம் தேதி பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் நாளது தேதி வரை தொகையும் செலுத்தி வைக்கவில்லை

என்றும், பதிலறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் விவசாயி அல்ல. அதனால் தமிழ்நாடு அரசின் ஏனைய கடன் நிவாரண சட்டத்தின் பலன்கள் ஏதும் அவருக்கு கிடைக்கக்கூடியதில்லை என தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம் :–</u>

இந்த வழக்கில் பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளபட்ட விபரங்களை தவிர மற்றவற்றை உண்மையென வாதியே நிரூபிக்க கடமை பட்டவர் ஆவார் என்றும், இந்த வழக்கின் வாதியை பிரதிவாதிகளுக்கு நேரடியாக தெரியாது என்றும், இந்த வழக்கில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் கடனுறுதி பத்திரத்தை பிரதிவாதிகள், வாதியிடம் எழுதி கையொப்பமிட்டு கொடுக்க வில்லை என்றும், அது வாதியால் மோசடியாக தயாரிக்கப்பட்டது ஆகும்.

ii) 1ம் பிரதிவாதி திருத்துறைப்பூண்டி டவுன் முத்துப்பேட்டை சாலையில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றும், கடந்த 2019ம் வருடம் ஏப்ரல் மாதம் தனது மகளுக்கு திருமணம் செய்ய ஏற்பாடு செய்து வந்தார் என்றும், அது சமயம் அவருக்கு திருமண செலவுக்கு பணம் தேவைப்பட்டது என்றும், அவரது குடும்பத்துக்கு பழக்கப்பட்ட, திருத்துறைப்பூண்டி டவுன் முத்துப்பேட்டை ரோட்டில் வசிக்கும், அதாவது பிரதிவாதிகளின் வீட்டிற்கு அருகே வசிக்கும் திருமதி.சந்திரா என்பவரிடம் கடனாக பணம் கேட்டார் என்றும், அவர் தனக்கு தெரிந்த சிதம்பரத்தில் குடியிருந்து வரும் துரைமுருகன் (வாதி) என்பவரிடம்

கடனாக வட்டிக்கு பணம் வாங்கி தருவதாக சொன்னார் என்றும், அதனை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டனர் என்றும், திருமதி.சந்திரா 1ம் பிரதிவாதியிடம் சொன்னபடி கடந்த 04.04.2019ம் தேதி 1,00,000/- (ஒரு லட்சம்) கடனாக கொடுத்தார் என்றும், அதற்கு 1ம் பிரதிவாதியிடம் திருத்துறைப்பூண்டி டவுன் இந்தியன் வங்கியின் பூர்த்தி செய்யப்படாத காசோலை (Cheque) 1ம் பிரதிவாதி கையெழுத்திட்டும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வாதியின் (துரைமுருகன்) பெயரிலான ரூ.50/-க்கான பத்திரம் 1, 2ம் பிரதியாதியால் கையெழுத்திடப்பட்டும் அதனை திருமதி.சந்திராவிடம் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி தொகைக்கு 3 வட்டி (36%) கொடுப்பதாக 1 ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், பொதுவாக வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் பூர்த்தி செய்யப்படாத காசோலை மற்றும் பூர்த்தி செய்யப்படாத கடன் பத்திரத்தில் கையொப்பம் பெற்றுக் கொள்வது வழக்கம், அந்த வகையில் 1ம் பிரதிவாதி, திருமதி.சந்திராவிடம் மேற்படி ஆவணங்களை கொடுத்தார் என்றும், மகள் திருமணம் முடிந்த பின்பு 1ம் பிரதிவாதி உரிய வட்டியினை திருமதி.சந்திரா வசம் கொடுத்து வந்தார் என்றும், உடனே அசல் தொகையை திரும்ப கொடுக்க முடியவில்லை என்றும், பிறகு கடந்த 30.7.2019ம் தேதி 1ம் பிரதிவாதி திருமதி.சந்திராவை சந்தித்து ரூ1,00,000/- (ஒரு லட்சம்) அசல் தொகையை கொடுத்து, 1ம் பிரதிவாதி மேற்படி கடன் பத்திரம், காசோலையை திருப்பி கேட்ட போது மேற்படி துரைமுருகனிடம் (வாதி) வாங்கி கொடுப்பதாக உறுதி அளித்த நம்பிக்கையில் பிரதிவாதிகள் இருந்து வந்தனர் என்றும், பிறகு வாதி தனக்கு வேண்டியவர்கள் மூலம் திருமதி.சந்திராவிடம் 1ம் பிரதிவாதிக்கு கைப்பட கடிதம் ஒன்றை எழுதி கொடுத்தனுப்பியிருந்தார் என்றும், அதில் 29 மாதங்களுக்கு ரூ.6,000/-வீதம் (மாத வட்டி) மொத்தம் ரூ.1,74,000/-

மும், அசல் ரூ.1,00,000/— மும் ஆக கூடுதல் ரூ.2,74,000/— (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தி நான்காயிரம் மட்டும்) என எழுதி கையொப்பமிட்டு அனுப்பியிருந்தார் என்றும், மேலும் பிரதிவாதிகள் கொடுத்த ஒரு லட்சத்தில் ரூ.70,000/— மட்டுமே வாதி பெற்றுக் கொண்டதாகவும், (30.7.2019 ம் தேதி திருமதி.சந்திராவின் வங்கி கணக்கு மூலம் பெற்றுக் கொண்டதாக வாதி உறுதி செய்து கடிதம் எழுதி உள்ளார்) பிரதிவாதிகள் வாதியால் கைப்பட எழுதி கையொப்பமிட்ட கடிதத்தை இத்துடன் தாக்கல் செய்துள்ளார்கள்.

Iii) மேலும் திருமதி.சந்திரா மற்றும் வாதிக்கு தெரிந்த சிலர் மூலம் தொடர்ந்து வாதி, 1ம் பிரதிவாதியை பணம் கேட்டு மிரட்டிவந்தார், 1ம் பிரதிவாதி கடந்த 04.04.2023ம் தேதி திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் வாதி மற்றும் திருமதி. சந்திரா இருவர் மீதும் பணம் கேட்டு மிரட்டுவதாக புகார் அளித்தார், புகாரை பெற்றுக்கொண்ட காவல் துறை உதவி ஆய்வாளர், துரைமுருகன் (வாதி) மற்றும் திருமதி சந்திராவை காவல் நிலைய விசாரணைக்கு அழைத்தார்கள் என்றும், அப்போது பிரச்சனையை பொதுவானவர்கள் மூலம் பேசி தீர்த்து கொள்வதாக வாதி கூறியதன் அடிப்படையில், வாதி மற்றும் திருமதி.சந்திரா மீது முதல் தகவல் அறிக்கை (FIR) எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும், உண்மை இவ்வாறு இருக்க வாதி 03.02.2024—ம் தேதி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், 1ம் பிரதிவாதி இது குறித்து திருமதி.சந்திராவை சந்தித்து கேட்டபொழுது, மேற்படி சந்திரா வாதியிடம் பேசி பிரச்சனையை முடித்து கொள்ளலாம் என்று கூறியதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை.

iv) தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ள வாதியிடம், பிரதிவாதிகள் கடனுறுதி பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றும், வாதி கூறியிருப்பது போல் ரூ.3,00,000/– (மூன்று லட்சம்) தொகை எதுவும் பெறவில்லை என்றும், வாதி பூர்த்தி செய்யப்படாத, பிரதிவாதிகளால் திருமதி.சந்திராவிடம் கொடுத்த 03.04.2019–ல் ரூ.50/–க்கான பத்திரத்தில் பூர்த்தி செய்து மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி வழக்கில் சொல்லியிருப்பது போல் பிரதிவாதிகள் வாதியிடம் நேரடியாக பணம் எதுவும் பெற்றுக் கொண்டு கடனுறுதி பத்திரம் எழுதி கையொப்பம் இட்டு கொடுக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக பிரதிவாதிகள், வாதியால் கைப்பட எழுதி கொடுக்கப்பட்ட கடிதத்தை இத்துடன் தாக்கல் செய்துள்ளனர்.

v) கடந்த 03.04.2019ம் தேதி இந்த பிரதிவாதியால் பூர்த்தி செய்து கொடுக்காத பத்திரத்தினை காலவரையறை சட்டப் படி முன் தேதியிட்டு, காலவரையறை பாதிப்பு அடைய கூடாது என்பதற்காக தயார் செய்து வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கடந்த 10.02.2022–ல் வாதி குறிப்பிடுவது போல் கடனுறுதி பத்திரம் பிரதிவாதிகள் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், மேலும் வாதியால் எழுதி கொடுத்த கடிதத்தில் கடந்த 04.04.2019 ல் கடன் வாங்கியதாக குறிப்பிட்டு எழுதிக் கொடுத்து விட்டு, பின்பு வழக்கிற்காக 10.02.2022 கடன் உறுதி பத்திரம் எழுதிக் கொடுத்ததாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது என்பது இந்திய சாட்சிய சட்டப்படி முரண்தடை கோட்பாட்டிற்கு எதிரானது (Principal of Estoppels) இதன் காரணமாக வாதியின் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டி உள்ளது என்றும், மேலும், காலாவதி என்கிற வகையிலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும், 1ம்

பிரதிவாதி 2020ம் ஆண்டு நீரழிவு நோயினால் கால் அகற்றப்பட்டு செயற்கை கால் மூலம் நடமாடி வருகிறார் என்றும், மிகுந்த கஷ்டமான நிலையில் குடும்பம் நடத்தி வருகிறார் என்றும், எனவே வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கினை பிரதிவாதிகளின் அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

4. <u>வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன</u>

1) Whether the pronote is true, valid binding the defendants as alleged for ?
2) Whether the plaintiff is entitled for the relief of suit amount with interest as prayed for ?
3) To what other relief the plaintiff is entitled for ?

5. <u>எழுவினாக்கள் 1 மற்றும் 2-க்கான தீர்வு:</u>

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின் போது பிரதிவாதிகள், வாதியின் குடும்ப நண்பர்கள் என்றும், பிரதிவாதிகளின் குடும்ப செலவினங்களுக்காகவும், வியாபார அபிவிருத்திக்காகவும் வாதியிடம், பிரதிவாதிகள் கடந்த 10.12.2022 அன்று ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம்) கடனாக ரொக்கமாக பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து செலுத்துவதாக ஒப்புக் கொண்டு ஒரு கடனுறுதி பத்திரம் வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி அசல் மற்றும் வட்டித் தொகையை பிரதிவாதிகள், வாதி வேண்டும்போது கொடுப்பதாகவும், மேலும், வாதி பிரதிவாதிகளிடம் கடன்தொகையையும் அதற்குரிய

வட்டியையும் சேர்த்து திரும்பத்தருமாறு பலதடவை நேரிலும், உறவினர்கள் மூலமும் கேட்டும் பிரதிவாதிகள் வீண் சால்சாப்புகளை சொல்லி கடன் தொகையையும், வட்டியையும் கொடுக்காமல் காலம் கடத்தி வந்தார்கள் என்றும், அதனால் வாதியிடம் பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகை ரூ.3,00,000/= (ரூபாய் மூன்று லட்சம்) மற்றும் அதற்குரிய வட்டித்தொகையையும் 15 தினங்களுக்குள் செலுத்தி வைக்கக் கோரி வாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 03.02.2024 ஆம் தேதி பதிவு அஞ்சலில் ஓர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பினார் என்றும், மேற்படி அறிவிப்பினை 10.02.2024ம் தேதி பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் நாளது தேதி வரை தொகையும் செலுத்தி வைக்கமாலும், பதிலறிவிப்பும் அனுப்பமாலும் இருப்பதால் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என வாதிடப்பட்டது.

6. மாறாக, பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின் போது கடந்த 2019ம் வருடம் ஏப்ரல் மாதம் பிரதிவாதிகளின் மகளுக்கு திருமணம் செய்ய ஏற்பாடு செய்து வந்தார்கள் என்றும், அது சமயம் பிரதிவாதிகளுக்கு திருமண செலவுக்கு பணம் தேவைப்பட்டது என்றும், அவரது குடும்பத்துக்கு பழக்கப்பட்ட, திருத்துறைப்பூண்டி டவுன் முத்துப்பேட்டை ரோட்டில் வசிக்கும், அதாவது பிரதிவாதிகளின் வீட்டிற்கு அருகே வசிக்கும் திருமதி.சந்திரா என்பவரிடம் கடனாக பணம் கேட்டார் என்றும், அவர் தனக்கு தெரிந்த சிதம்பரத்தில் குடியிருந்து வரும் துரைமுருகன் (வாதி) என்பவரிடம் கடனாக வட்டிக்கு பணம் வாங்கி தருவதாக சொன்னார் என்றும், அதனை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டனர் என்றும், திருமதி.சந்திரா 1ம் பிரதிவாதியிடம் சொன்னபடி கடந்த 04.04.2019ம் தேதி 1,00,000/− (ஒரு லட்சம்) கடனாக கொடுத்தார் என்றும், அதற்கு 1ம் பிரதிவாதியிடம் திருத்துறைப்பூண்டி

டவுன் இந்தியன் வங்கியின் பூர்த்தி செய்யப்படாத காசோலை (Cheque) 1ம் பிரதிவாதி கையெழுத்திட்டும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வாதியின் (துரைமுருகன்) பெயரிலான ரூ.50/-க்கான பத்திரம் 1, 2ம் பிரதியாதியால் கையெழுத்திடப்பட்டும் அதனை திருமதி.சந்திராவிடம் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி தொகைக்கு 3 வட்டி (36%) கொடுப்பதாக 1 ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், பொதுவாக வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் பூர்த்தி செய்யப்படாத காசோலை மற்றும் பூர்த்தி செய்யப்படாத கடன் பத்திரத்தில் கையொப்பம் பெற்றுக் கொள்வது வழக்கம், அந்த வகையில் 1ம் பிரதிவாதி, திருமதி. சந்திராவிடம் மேற்படி ஆவணங்களை கொடுத்தார் என்றும், மகள் திருமணம் முடிந்த பின்பு 1ம் பிரதிவாதி உரிய வட்டியினை திருமதி. சந்திரா வசம் கொடுத்து வந்தார் என்றும், உடனே அசல் தொகையை திரும்ப கொடுக்க முடியவில்லை என்றும், பிறகு கடந்த 30.7.2019ம் தேதி 1ம் பிரதிவாதி திருமதி.சந்திராவை சந்தித்து ரூ1,00,000/- (ஒரு லட்சம்) அசல் தொகையை கொடுத்து, 1ம் பிரதிவாதி மேற்படி கடன் பத்திரம், காசோலையை திருப்பி கேட்ட போது மேற்படி துரைமுருகனிடம் (வாதி) வாங்கி கொடுப்பதாக உறுதி அளித்த நம்பிக்கையில் பிரதிவாதிகள் இருந்து வந்தனர் என்றும், பிறகு வாதி தனக்கு வேண்டியவர்கள் மூலம் திருமதி.சந்திராவிடம் 1ம் பிரதிவாதிக்கு கைப்பட கடிதம் ஒன்றை எழுதி கொடுத்தனுப்பியிருந்தார் என்றும், அதில் 29 மாதங்களுக்கு ரூ.6,000/- வீதம் (மாத வட்டி) மொத்தம் ரூ.1,74,000/-மும், அசல் ரூ.1,00,000/- மும் ஆக கூடுதல் ரூ.2,74,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தி நான்காயிரம் மட்டும்) என எழுதி கையொப்பமிட்டு அனுப்பியிருந்தார் என்றும், மேலும் பிரதிவாதி கொடுத்த ஒரு லட்சத்தில் ரூ.70,000/- மட்டுமே வாதி பெற்றுக் கொண்டதாகவும், தற்போது வழக்கு தாக்கல்

செய்துள்ள வாதியிடம், பிரதிவாதிகள் கடனுறுதி பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றும், வாதி கூறியிருப்பது போல் ரூ.3,00,000/– (மூன்று லட்சம்) தொகை எதுவும் பெறவில்லை என்றும், வாதி பூர்த்தி செய்யப்படாத, பிரதிவாதிகளால் திருமதி.சந்திராவிடம் கொடுத்த 03.04.2019–ல் ரூ.50/–க்கான பத்திரத்தில் பூர்த்தி செய்து மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி வழக்கில் சொல்லியிருப்பது போல் பிரதிவாதிகள் வாதியிடம் நேரடியாக பணம் எதுவும் பெற்றுக் கொண்டு கடனுறுதி பத்திரம் எழுதி கையொப்பம் இட்டு கொடுக்கவில்லை என்றும், கடந்த 03.04.2019ம் தேதி இந்த பிரதிவாதியால் பூர்த்தி செய்து கொடுக்காத பத்திரத்தினை காலவரையறை சட்டப் படி முன் தேதியிட்டு, காலவரையறை பாதிப்பு அடைய கூடாது என்பதற்காக தயார் செய்து வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கடந்த 10.02.2022–ல் வாதி குறிப்பிடுவது போல் கடனுறுதி பத்திரம் பிரதிவாதிகள் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், மேலும் வாதியால் எழுதி கொடுத்த கடிதத்தில் கடந்த 04.04.2019 ல் கடன் வாங்கியதாக குறிப்பிட்டு எழுதிக் கொடுத்து விட்டு, பின்பு வழக்கிற்காக 10.02.2022 கடன் உறுதி பத்திரம் எழுதிக் கொடுத்ததாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது என்பது இந்திய சாட்சிய சட்டப்படி முரண்தடை கோட்பாட்டிற்கு எதிரானது (Principal of Estoppels) இதன் காரணமாக வாதியின் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டி உள்ளது என வாதுரைக்கப்பட்டது.

7. <u>வாதி வழக்குரையில் கோரியவாறு தாவா தொகை வட்டியுடன் கிடைக்கதக்கதா என பரிசீலனை செய்ததில் :–</u>

வாதி வழக்கிற்கு ஆதரவாக அவரது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து வழக்குரையை அனுசரித்து வா.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார்.

**8. வா.சா.1 அவரது முதன்மை சாட்சியத்தில்**

" கடந்த 10.12.2022 அன்று ரூ.3,00,000/− (ரூபாய் மூன்று லட்சம்) கடனாக ரொக்கமாக பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/−க்கு ரூ.1/− வீதம் வட்டி சேர்த்து செலுத்துவதாக ஒப்புக் கொண்டு ஒரு கடனுறுதி பத்திரம் எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார்.

**9. வா.சா.2 அவரது முதன்மை சாட்சியத்தில்**

" வாதியிடமிருந்து பிரதிவாதிகள் தங்களது குடும்ப செலவுகளுக்கும், வியாபார அபிவிருத்திகாகவும் கடந்த 10.12.2022ம் தேதி கடனாக ரூ.3,00,000/− பிரதிவாதிகள் ரொக்கமாக திருத்துறைப்பூண்டியில் உள்ள பிரதிவாதிகள் வீட்டில் பெற்றுக்கொண்டார்கள். மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/−க்கு ரூ.1/− வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு அது விபரத்திற்கு ஒரு கடனுறுதி பத்திரத்தில் ஒரு பிராமிசரி நோட்டு எழுதி பிரதிவாதிகள் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார்கள். அதில் நான் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்தேன். முதல் சாட்சியாக குன்னூரைச் சேர்ந்த சோமு குமாரர் ராஜேந்திரன் கையொப்பம் செய்தார். "

என சாட்சியம் அளித்துள்ளார்.

**10. வா.சா.2 அவரது குறுக்கு விசாரணையில்**

" எந்த தேதியில் வாதி, பிரதிவாதிகளிடம் பணம் கொடுத்தார் என்றால் 10.12.2022ல் கொடுத்தார். எவ்வளவு தொகையை வாதி கொடுத்தார் என்றால் ரூ.3,00,000/−ஐ பிரதிவாதியின் வீட்டில் வைத்துதான் கொடுத்தார். பணத்தை எப்படி கொடுத்தார் என்றால் ரூ.500

நோட்டு 6 கட்டுகள் கொடுத்தார். மேற்படி தொகையை கொடுத்ததற்கு வாதி, பிரதிவாதிகளிடம் 50 ரூபாய் முத்திரை தாளில் எழுத்து பூர்வமாக எழுதி வாங்கி கொண்டார். " என சாட்சியம் அளித்துள்ளார்.

**11.** வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட **வா.சா.ஆ.1**–ஐ பரிசீலனை செய்ததில் கடந்த 10.12.2022–ல் வாதிக்கு, பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடனுறுதி பத்திரம் அசல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.1– ஆவணத்தில் பிரதிவாதி, வாதியிடமிருந்து

> " 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 10 ந் தேதி, கடலூர் மாவட்டம், சிதம்பரம், க.எண்.302, சிவஜோதி நகர், 3வது குறுக்குத் தெரு, விவேகானந்தர் சாலை என்ற முகவரியில் வசித்து வரும் எம்.விருத்தாசலம் குமாரர் துரைமுருகன் அவர்களுக்கு, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி டவுன், 54/21A முத்துப்பேட்டை ரோடு என்ற முகவரியில் வசித்து வரும் மகாராஜன் குமாரர் ராஜேந்திரன்–1, மேற்படி முகவரியில் வசித்து வரும் ராஜேந்திரன் மனைவி கஸ்தூரி–2 ஆகிய நாங்கள் இருவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்த கடனுறுதி ஆவணம் என்னவென்றால் எங்களது குடும்ப செலவிற்காகவும், வியாபார அபிவிருத்திக்காகவும் தங்களிடம் நாளது தேதியில் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம்) மட்டும் கடனாக ரொக்கமாக பெற்றுக்கொண்டுள்ளோம். அதற்கு மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.1/– வீதம் வட்டி சேர்த்து தாங்கள் வேண்டும்போது அசலையும், வட்டியையும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு இந்த கடனுறுதி ஆவணம் தங்களுக்கு எழுதிக்கொடுத்துள்ளோம். "

என கண்டு எழுதப்பட்டுள்ளது வா.சா.ஆ.1–ன் படி அறிய முடிகிறது.

மேலும், தாவா தொகையை வாதி பலமுறை பிரதிவாதிகளிடம் கேட்டும் கொடுக்காததால் வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக கடந்த 03.02.2024ல் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு அனுப்பியுள்ளதும், அந்த அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டுள்ளதும் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3ன் மூலம் அறிய முடிகிறது. வாதி தரப்பில் அனுப்பிய அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் தரப்பில் அறிவிப்பில் கண்ட சங்கதிகளை மறுத்து எவ்வித பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பது அறியமுடிகிறது.

**12.** மேலும், 1ம் பிரதிவாதி அவரது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து பி.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். **பி.சா.1 அவரது முதன்மை சாட்சியத்தில்**

> " என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது மற்றும் எனது மனைவி கஸ்தூரி கையெழுத்து என்றால் சரிதான். " என சாட்சியம் அளித்துள்ளார்.

**13. பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில்**

> "வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நான் வெற்று பத்திரத்தில் கையெழுத்து போட்டதாக தான் கட்சியாடிகிறேன். சந்திரா என்னிடம் பணம் பெற்றதற்கான எழுதுபூர்வமான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளளேனா என்றால் இல்லை. நான் சந்திராவிடம் பணம் கொடுத்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் வாங்கி கொண்டேனா என்றால் இல்லை. 30.07.2019ல் நான் சந்திராவிடம் ரூ.1,00,000/- கொடுத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சந்திரா என்பவரிடம்

ரூ.1,00,000/– வாங்கியதாக தான் கட்சியாடிகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்தேன் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விவரங்களை படித்து பிறகு துரைமுருகன் என்பவருக்கு மறுப்பு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு நான் பதில் கொடுக்கததற்கு காரணம் அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்று தெரிந்த காரணத்தினால் தான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். " என சாட்சியம் அளித்துள்ளார்.

**14.** மேற்கண்ட தீர்வுக்குரிய அசல் வழக்கில் கண்ட இருதரப்பு வாதுரைகளையும், சாட்சிகளையும், சான்றவாணங்களையும் பரிசீலனை செய்ததில் வாதியிடம், பிரதிவாதிகள் குடும்ப செலவினங்களுக்காகவும், வியாபார அபிவிருத்திக்காகவும் வேண்டி கடனாக கடந்த 10.12.2022–ல் ரூ.3,00,000/க்கு பெற்றுக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் வா.சா.ஆ.1ஆன கடனுறுதி பத்திரத்தை சாட்சி வா.சா.2ஆன லோகநாதன் என்பவர் கையெழுத்து செய்துள்ளதும், வா.சா.ஆ.1–ல் கண்ட தொகையை பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக தான் பிரதிவாதிகள் சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் போட்டு கொடுத்துள்ளது வாதி தரப்பு சாட்சியத்திலிருந்தும், **வா.சா.ஆ.1ஆன** ஆவணத்திலிருந்தும் நிரூபனமாகிறது.

**15.** மேற்கண்ட தீர்வுக்குரிய அசல் வழக்கில் கடனுறுதி பத்திரத்தில் கண்ட தொகையை வாதி பல முறை பிரதிவாதிகளிடம் கேட்டும்

பிரதிவாதிகள் தொகையை செலுத்த முன்வராததால் வாதி அவரது வழக்கறிஞர் மூலம் 03.02.2024–ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளதும், மேற்படி அறிவிப்பை 10.02.2024–ல் அந்த அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை என்பதும் **வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3** வரையிலான ஆவணங்களிலிருந்தும் அறியமுடிகிறது. வாதி தரப்பில் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி அதை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள், வாதி கொடுத்த அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பதும், அறிவிப்பில் கண்ட சங்கதிகள் உண்மை என்பதால் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என பி.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளது நிரூபணமாகிறது.

**16.** மேற்கண்ட தீர்வுக்குரிய அசல் வழக்கில் கண்ட பிரதிவாதிகள் வாதியிடம் கடனாக தாவா தொகையை பெறவில்லை என்றும், சந்திரா என்பவரிடமிருந்து தான் ரூ.1,00,000/– பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக பூர்த்தி செய்யப்பாடத இந்தியன் வங்கி காசோலை மற்றும் ரூ.50 முத்திரை தாளில் கையொப்பம் போட்டு கொடுத்துள்ளதாகவும் கடனாக பெற்ற தொகையை வட்டியுடன் சந்திரா என்பவரிடம் திரும்ப கொடுத்துவிட்டதாகவும், அவரது சாட்சியத்திலும், எதிர்வழக்குரையிலும் தெரிவித்துள்ளார். அந்த சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி சந்திரா என்பவரையோ அல்லது மேற்படி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளையோ விசாரிக்காத நிலையில் வாதியிடம் தாவா தொகையை பெறவில்லை என்றும், வாதியிடம் எந்தவிதமான ஆவணங்களையும் எழுதிக்கொடுக்கவில்லை என கூறும் வாதம் ஏற்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**17.** மேற்கண்ட தீர்வுக்குரிய அசல் வழக்கில் கண்ட வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியத்திலிருந்தும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களிலிருந்தும் வாதியிடமிருந்து, பிரதிவாதிகள் உரிய பிரதிபிரயோஜனத்திற்காக தாவா தொகையை கடனாக பெற்றுள்ளதும், அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 ஆவணத்தை பிரதிவாதிகள் கையெழுத்துகள் போட்டு கொடுத்துள்ளதும் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்களை ஒப்புக்கொண்டுள்ளதாலும், பிரதவாதிகள் வாதியிடமிருந்து தாவா தொகையை பெற்றுள்ளது உண்மை என்றும், பிரதிவாதிகள் தரப்பில் கூறுவது போல் சந்திரா என்பவரிடமிருந்து பணம் பெற்றதாகவும், அந்த பணத்தை திரும்ப கொடுத்துவிட்டதாகவும் கூறும் கூற்று ஏற்கதக்கதல்ல என் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**18.** மேற்கண்ட தீர்வுக்குரிய அசல் வழக்கில் கண்ட வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி பத்திரத்தில் பிரதிவாதிகள் தான் கையெழுத்து மட்டும் போட்டுக்கொடுத்தாகவும் அதிலுள்ள விவரங்களை வாதியால் பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என பிரதிவாதிகள் அவரது எதிர்வழக்குரையிலும், சாட்சியத்திலும் தெரிவித்துள்ளார்கள். மேற்கண்ட அசல் வழக்கில் கண்ட வா.சா.ஆ.1–ஐ பிரதிவாதிகள் தான் உரிய மறுபயனிற்காக தான் எழுதிக்கொடுத்துள்ளதும், அந்த கடனுறுதி பத்திரம் உண்மை என்பதும், கடனுறுதி பத்திரத்தில் கண்ட தொகையை தான் பெறவில்லை என்பது குறித்து வாதியின் சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் மறுத்து பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும், ஆவணங்களும் முன்னிலைப்படுத்தாத நிலையில் மாற்று முறை ஆவணச்சட்டம் **பிரிவு 20**–ன் படி கடனுறுதி பத்திரத்தில் உள்ள

கையெழுத்தை ஒப்புக்கொண்டால் அதிலுள்ள வாசகங்களை எழுதி கொடுத்தவர் தான் பூர்த்தி செய்து கொடுத்ததாக அனுமானம் கொள்ளலாம் என கண்டுள்ளது.

**19.** மேற்கண்ட தீர்வுக்குரிய அசல் வழக்கில் கண்ட வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின் போது வாதியிடமிருந்து, பிரதிவாதிகள் உரிய பிரதிபிரயோஜனத்திற்காக ரூ.3,00,000/- கடனாக பெற்று கொண்டதற்கு ஆதரவாக கடனுறுதி பத்திரத்தை சாட்சிகள் முன்னிலையில் எழுதி கொடுத்துள்ளதால் மாற்று முறை ஆவணச்சட்டத்தின் 118-ன் படி வாதியிடம் கடனுறுதி பத்திரத்தில் கண்ட தொகையை பெற்று கொண்டு அதற்கு ஆதரவாக தான் எழுதி கொடுத்ததாக அனுமானம் கொள்ளலாம் என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்கண்ட முன் தீர்ப்புகளின்படி தீர்வு காண விரும்புகிறது.

1. **2013 (3) MWN (Civil)544**

**IN THE HIGH COURT OF MADRAS**

**S.TAMILVANAN, J.**

**S.A.NO.1025 Of 2009 & M.P.No.1 of 2009**

04.09.2013

C.Victoria . . . . .Appellant

vs.

Subramani @ Periyathambi . . . .. Respondent

EVIDENCE ACT, 1872 (1 of 1872), Sections 58, 101 to 104 - NEGOTIABLE INSTRUMENTS ACT, 1881 (26 of 1881), Section 118 - Suit for Recovery of Money based on Pro-Note – Defendant admitting signature and execution of Pro-Note In such circumstances, burden lies on Defendant to prove that there was no passing of consideration on Pro-Note - Attestors to Pro-Note deposing about execution of Pro-Note and receipt of consideration by Defendant - Defendant being an educated person, held, would not have signed on Pro-Note without receiving

consideration from Plaintiff - Defendant, having failed to prove that Pro-Note was not supported by consideration, established that Plaintiff is holder in due course of Pro-Note Contradictory evidence adduced on part of Defendant, held, also falsifying defence of Defendant - Order of Court below decreeing Suit in favour of Plaintiff, upheld - Second Appeal dismissed.

2. **2021 (3) MWN (Civil) 35**

**IN THE HIGH COURT OF MADRAS**

**T.RAVINDRAN, J.**

**S.A.NO.967 of 2008**

19.01.2021

Sundaram (Died) and others ......Appellants

Vs.

L.Gowri Shankar .....Respondent

NEGOTIABLE INSTRUMENTS ACT, 1881 (26 of 1881), Section 118 - Presumption under provision - Whether established - Case of Plaintiff that Defendant and one another borrowed Suit amount from him- Plaintiff issued pre-Suit Notice -- Notice admitted by Defendant, but no reply for same issued controverting allegations of Plaintiff Suit transaction established by Plaintiff by examining Witnesses Established that Defendant voluntarily put signatures on Promissory Note Stand of Defendant that he had discharged borrowed sum, unsubstantiated Presumption arising in favour of Plaintiff, not rebutted by Defendant - Decree is Suit passed by Trial Court, restored Order of First Appellate Court dismissing Suit, erroneous and set aside-Second Appeal allowed .

3. **2024-5-L.W.733**

**BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT**

**A.S. (MD) No.126 of 2024 and C.M.P.(MD) No.6651 of 2024**

**N.Seshasayee, J.,**

**and**

**P.Vadamalai, J.**

R.Singaravadivelan ...Appellant/Defendant

Vs.

Durai Senthil ... Respondent/Plaintiff

Promissory note/Execution, denial of suit for recovery of money based on promissory note - Defendant contended that he signed in a blank pro-note - when

signagture is admitted and signatory states that he executed the pro-note in blank, it is an inchoate pronote para 16

Blank pro-note signed by the defendant left with T, which was subsequently found in possession of respondent/plaintiff - T is the competent person to establish the stand taken by defendant but defendant has not chosen to examine hìm para 23

signature of defendant on the pro-note is proved with oral and documentary evidence – presumption under section 118 clearly arises until the contrary is proved. Para 15

Plaintiff has proved the execution of pro-note and receipt of loan amount.

4. **2025 (3) MWN (Civil) 113**

**IN THE HIGH COURT OF MADRAS**

**R.SAKTHIVEL, J.**

**S.A.NO.514 OF 2021 & C.M.P. No. 10389 of 2021**

**[2025 MHC 1259]**

**04.06.2025**

M.D.Sampathkumar ..... Appellant

vs.

Devaraj .... Respondent

NEGOTIABLE INSTRUMENTS ACT, 1881 (26 of 1881), Section 118 - Presumption of Consideration - Attesting Witness examined - Execution of Promissory Note proved through testimony of Witnesses Presumption under, Section 118 applies - Burden on Defendants to rebut presumption - No rebuttal evidence adduced - Promissory Note held to be genuine and validly executed for consideration.

5. **2024 (1) CTC Page No.167 விஜயலெட்சுமி (எ) வெண்ணிலா – மேல்முறையீட்டாளர் –எதிர்– பி.கந்தசாமி – எதிர்மனுதாரர் .**

மேற்கண்ட முன்தீர்ப்புகளின்படி தீர்வுக்குரிய அசல் வழக்கில் கண்ட கடனுறுதி பத்திரத்தை சாட்சிகள் மூலமாக பிரதிவாதிகள்,

வாதியிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு எழுதி கொடுத்துள்ளதும் வாதி தரப்பு சாட்சியத்திலிருந்தும், சான்றவாணங்களிலிருந்தும் நிரூபனமாகியுள்ளது.

**20.** மேலும், ஒருவர் கடனுறுதி பத்திரத்தில் கையொப்பமிட்டதை ஒப்புக்கொண்டால், அவர் பணம் பெற்றதாக சட்டத்திற்கு முன்பு கருதப்படுகிறார் எனவும், பிரதிவாதிகள், வாதியிடம் பண உறவு இருந்ததை ஒப்புக்கொள்கிறார் என்பதால், அவரது மறுப்பு பலவீனமாகும் எனவும், கடனுறுதி பத்திரத்தை மறுப்பது மட்டும் போதாது. கடனுறுதி பத்திரம் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கான சாட்சிகளையும், சான்றாவணங்களையும் பிரதிவாதிகள் காட்ட வேண்டும் எனவும், Negotiable Instruments Act, 1881–ன் Section 118(a)–ன் படி மறுக்கும் பொறுப்பு (Burden of Rebuttal): மாறாக, அந்தப் கடனுறுதி பத்திரத்திற்கு பிரதிபலன் இல்லை என்றோ அல்லது அது சட்டவிரோதமான காரணத்திற்காகப் பெறப்பட்டது என்றோ நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, எதிர் தரப்பினரைச் சாரும் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**21.** மேற்கண்ட தீர்வுக்குரிய அசல் வழக்கில் 10.12.2022–ல் பிரதிவாதிகள், வாதியிடம் கடனாக ரூ3,00,000–ஐ பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 கடனுறுதி பத்திரத்தை சாட்சிகள் முன்னிலையில் எழுதி கொடுத்துள்ளது உண்மை தான் என்றும், அந்த கடனுறுதி பத்திரம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தும் என்றும், அந்த கடனுறுதி பத்திரத்தில் கண்ட தொகையை வட்டியுடன் செலுத்த பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், வாதிக்கு வழக்குரையில் கோரியவாறு தாவா தொகை வட்டியுடன் கிடைக்கதக்கது என எழுவினாக்கள் 1 மற்றும் 2–க்கு தீர்வு காணப்படுகிறது.

**22. <u>எழுவினா 3–க்கான தீர்வு</u>**

எழுவினாக்கள் 1 மற்றும் 2–க்கு தீர்வுக்கண்டுள்ளதால் வாதிக்கு மேற்கொண்டு எவ்வித பரிகாரங்களும் கிடைக்கதக்கதல்ல என எழுவினா –3க்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, வாதிக்கு வழக்குரையில் கோரியவாறு 10.12.2022–ம் தேதியில் எழுதிக்கொடுத்த கடனுறுதி பத்திரத்தில் கண்ட அசல், வட்டி தொகையான ரூ.3,55,529/–ஐயும், மேற்படி தொகையில் அசல் ரூ.3,00,000/–க்கு வழக்கு தாக்கலான தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 12%–ம், தீர்ப்பாணைக்கு பிறகு தொகை செலுத்தும் நாள் வரை 6% பின் வட்டியுடன் பிரதிவாதிகள், வாதிக்கு செலவுத்தொகையுடன் செலுத்த வேண்டும் என தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08– ஆம் நாள் என்னால் இத்திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.04.10 19:42:06 +0530

சார்பு நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.

**<u>1. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.1 | துரைமுருகன் | வாதி |
| வா.சா.2 | லோகநாதன் | |

**2. வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.12.2022 | பிரதிவாதிகள், வாதிக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதி பத்திரம் – அசல் (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ரெவான்யூ ஸ்டாம்ப் ஒட்டவில்லை என்பதால் குறியீடு செய்ய முடியாது என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. ) |
| வா.சா.ஆ.2 | 03.02.2024 | வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு – அறிவிப்பு நகல் |
| வா.சா.ஆ.3 | 10.02.2024 | பிரதிவாதிகள் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை – அசல் |

**3. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி :–**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.1 | இராஜேந்திரன் | 1ம் பிரதிவாதி |

**4. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | -- | வாதி துரைமுருகன் என்பவர் பிரதிவாதிக்கு பணம் வாங்கியது குறித்து கைப்பட எழுதிய கடிதம் |
| பி.வா.சா.ஆ.2 | 04.04.2023 | 1ம் பிரதிவாதி, வாதி மற்றும் சந்திரா மீது திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ரசீது அசல் (வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. ) |
| பி.வா.சா.ஆ.3 | -- | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆதார் அட்டை – நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. ) |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.4 | 10.04.2019 | பிரதிவாதிகளின் மகள் இராதிகா என்பவரின் திருமண பத்திரிக்கை – அசல் |

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.04.10 19:42:11 +0530

சார்பு நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.